**கூடுதல் மகளிர் நீதிமன்றம், அரியலூர்**

**DVC.09/2024**

**பெயர்:மல்லிகா ம.சா.1 நாள்: 19.05.2026**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார். எதிர்மனுதாரர்கள் ஆஜர். இருத்தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை:**

1) 10 பவுன் நகை மற்றும் சீர்வரிசை சாமான்கள் என் வீட்டில் என் திருமணத்தின் போது சீராக போட்டதாகவும் அதை திரும்ப பெறுவதற்காக இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி என் திருமணத்தில் செய்த நகை மற்றும் சீர்வரிசை பொருட்களை திருப்பி கொடுத்திருந்தால் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்க அவசியம் ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். மனுவில் கூறியுள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எந்த வருடம் எந்த தேதி எதிர் மனுதாரர் வரதட்சனை கோரினார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எனக்கு தேதி நினைவில்லை. பாட்டிலை அடித்து என்னை குத்த வந்ததாக சொல்லியுள்ளது தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். திருமணத்தில் எதிர் மனுதாரர் தரப்பில் 15 பவுன் நகை போட வேண்டும் என்று கூறினார்கள் என்றும் நாங்கள் 10 பவுன் நகை தான் போட்டோம் என்றும் அதற்காக பஞ்சாயத்து வைத்து பேசினார்கள் என்றும் பஞ்சாயத்தில் மீதமுள்ள ஐந்து பவுன் நகையை போட வேண்டும் என்றும் போட்டால்தான் என்னுடன் மீண்டும் வாழ்வேன் என்றும் எதிர்மனுதாரர் கூறியதாக என் மனுவில் நான் குறிப்பிட்டுள்ள நிலையில் எந்த தேதியில் எந்த வருடம் இது நடந்தது என்று நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். என் மாமனாருக்கு உடல்நிலை சரியில்லாத போது அவரை நான் பார்க்க சென்றேன் என்றும் அப்பொழுது என்னிடமிருந்து 8 பவுன் நகையை 1ஆம் எதிர்மனுதாரர் பெற்றுக் கொண்டார் என்று சொல்லியுள்ளது அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. என் அண்ணன் இரு சக்கர வாகனம் பழுது பார்ப்பவர் என்றால்

சரிதான். அவர் எனது கணவரின் வாகனத்தை சரிவர பழுது பார்க்கவில்லை என்று இருவருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான்.

2) என் அண்ணன் அதிக காசு கேட்கிறார் என்று அதற்கு சந்தேகப்பட்டு அதனால் தான் எனக்கும் என் கணவருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த பிரச்சனையால் தான் நான் என் அம்மா வீட்டிற்கு சென்று விட்டேன் என்றால் சரிதான். இந்த பிரச்சனையால் என் கணவர் என் நெஞ்சில் உதைத்ததால் எனக்கு வலி ஏற்பட்டு மருத்துவமனைக்கு சென்று அதற்கு பிறகு தான் என் அம்மா வீட்டிற்கு சென்றேன். இரண்டாம் எதிர் மனுதாரர் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார் என்றும் நான் கீழே விழுந்ததால் காயம் ஏற்பட்டது என்று கூறி மருத்துவமனையில் சேர்த்தார் என்று மனுவில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். என்னை மருத்துவமனைக்கு யார் அழைத்துச் சென்றார் என்று மருத்துவ ஆவணத்தில் இருக்கும் என்றால் சரிதான். 28.11.2023–ம் தேதி இரவு 10.30 மணி அளவில் 1ஆம் எதிர்மனுதாரர் என்னை நெஞ்சில் உதைத்தார் என்று நான் குறிப்பிட்ட சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இது குறித்து அரியலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் நான் காவல் நிலையத்தில் கொடுத்ததாக சொல்லப்படும் புகாரின் நகல் உள்ளது என்றால் சரிதான். ஆனால் மேற்படி புகாரின் நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3)அரியலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்த போது போலீசார் இரு தரப்பினரையும் அழைத்து விசாரித்தனர் என்றும் அப்போது எதிர்மனுதாரர் அங்கு வந்து இனி அடித்து துன்புறுத்த மாட்டேன் என எழுதிக் கொடுத்துவிட்டு சென்றுவிட்டார் என்றும் அத்தோடு சீதன பொருட்கள் இரு சக்கர வாகனம் வாங்குவதற்கு எனது வீட்டில் கொடுத்த ரூபாய் 65 ஆயிரம் மற்றும் 8 பவுன் அடகு வைத்த நகையை கொடுத்துவிட்டு இனி தொந்தரவு செய்ய மாட்டேன் என்று கூறிவிட்டு சென்றுவிட்டார் என்றும் குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். என் கணவர் எலக்ட்ரீசியன் ஆக

வேலை செய்ததாக மனுவில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அவருக்கு நிரந்தர வேலை இல்லை என்றாலும் ஒரு நாள் வேலை இருக்கும் ஒரு நாள் வேலை இருக்காது என்றாலும் சரிதான். கிடைக்கும் வருமானத்தை வைத்து தான் எதிர்மனுதாரர் அவரது குடும்பத்தை பராமரிக்க வேண்டும் என்றால் சரிதான். மேற்படி வண்டி பழுது பார்ப்பது தொடர்பாக எங்களுக்கிடையே பிரச்சனை ஏற்படவில்லை என்றால் நாங்கள் இருவரும் சந்தோஷமாக வாழ்ந்திருப்போம் என்றால் சரிதான்.

4)என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.3 ல் எனக்கு நெஞ்சில் வலி இருப்பதாக எங்கும் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சிட்டி யூனியன் வங்கியில் என் பெயரில் தான் அடகு வைத்ததாக உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.3 ல் 12.12.2025–ஆம் தேதி நான் மருத்துவமனையில் புற நோயாளியாக சிகிச்சை சேர்ந்ததற்கான மருத்துவ ஆவணம் என்றால் சரிதான். வழக்கை இந்நீதிமன்றத்தில் 2024 ஆம் தேதி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.4 ல் கடனை 08.08.2025 ஆம் தேதி நான் வாங்கியதாக உள்ளது என்றால் அது புதுப்பிக்கப்பட்ட விவரம் தான் அதற்கு முன்பாகவே கடனை வாங்கியுள்ளேன். 2 ஏற்கனவே நான் கடன் பெற்றதற்காக எந்த ஒரு ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.5 ல் கடன் 22.10.2025 ஆம் தேதி தான் வாங்கியதாக உள்ளது என்றால் அதுவும் புதுப்பிக்கப்பட்ட விவரம் தான் எதிர்மனுதாரருடன் மற்றும் அவரது குடும்பத்துடன் சேர்ந்து வாழ எனக்கு விருப்பமில்லை என்றால் சரிதான்.

5) நகைகள் அனைத்தும் என்னிடம் தான் உள்ளது என்றாலும் நான் பொய்யாக ஒன்றாம் எதிர் மனுதாரர் இடம் உள்ளது என்று அவர் வாங்கி எனது பெயரில் அடகு வைத்தார் என்று பொய்யாக மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சீர்வரிசை பொருட்கள் மற்றும் வண்டிக்கு சேர்த்து 65,000 பணம் 1 ஆம் எதிர் மனுதாரர் கொடுத்துவிட்டார் என்றால் இல்லை என் அண்ணனிடம் என் கணவர் வண்டி பழுது பார்த்தபோது ஏற்பட்ட சிக்கலை மனதில் வைத்துக்கொண்டு என் அண்ணனுக்கு உறுதுணையாக நிற்க வேண்டும் என்று என் கணவரை விட்டுவிட்டு நானே வீட்டை விட்டு சென்று விட்டேன்

என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் கூறியது போல் எதிர் மனுதாரர் என்னை எந்தவிதத்திலும் கொடுமை செய்யவில்லை என்றாலும் வரதட்சணை கேட்கவில்லை என்றாலும் அனைத்து சங்கதிகளும் உண்மைக்கு புறம்பானவை என்றாலும் அவ்வாறு உண்மையிலேயே நடந்திருந்தால் அப்பொழுது எதிர்மனுதாரர்களுக்கு எதிராக புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் சரியல்ல .

6) வண்டி தொடர்பாக எனக்கும் எதிர்மனுதாரருக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் எத்தனை வருடங்களாக பிரிந்து வாழ்கிறோம் என்றால் பிரிந்து வாழ்ந்ததிலிருந்து வழக்கு தாக்கல் செய்யும் வரை சுமார் 2-2.5 வருடம் இருக்கும். என் வீட்டில் போதுமான வசதி உள்ளது என்றால் சரிதான் எதிர்மனுதாரருக்கு எலக்ட்ரீசியன் வேலை மட்டும் தான் தெரியும் என்றால் சரிதான். நானே எதிர் மனுதாரருடன் வீண் சண்டை செய்து நானே வீட்டை விட்டு என் அம்மா வீட்டிற்கு சென்று விட்டேன் என்றும் நடக்காத சம்பவத்தினை பொய்யாக புகார் மனுவாக எதிர் மனுதாரரை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி அல்ல. நான் மேலே மனுவில் கேட்ட பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் மனைவியை எதிர்மனுதாரர்களுக்கு செலவு தொகை கொடுத்து தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருக்கு சரிவர சமைத்துக் கொடுக்காமல் நல்ல மனைவியாக எந்த கடமையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதைப் பற்றி கேட்கும் போதெல்லாம் என் அம்மா வீட்டிற்கு சென்று விடுவேன் என்றால் சரியல்ல.

7) என் வீட்டில் கொடுத்த 2 பவுன் நகையை விவசாய கடனுக்காக அடகு வைத்துள்ளேன் என்றால் சரிதான். என் பெரியப்பா மருதமுத்து என்பவர் அயல்நாட்டில் சீட்டு பணம் கட்டி ஏமாந்து விட்டார் என்றால் சரிதான். அவருக்கு உதவி செய்ய வேண்டும் என்பதால்தான் மூன்று பவுன் நகையை அடகு வைத்தேன் என்றால் இல்லை. 1ஆம் எதிர்மனுதாரர் சொன்னதன் பெயரில்தான் நான் நகையை என் பெரியப்பாவுக்கு அடகு வைத்து கொடுத்தேன். என்னை

தாண்டி 1ஆம் எதிர் மனுதாரர் என் குடும்பத்தின் மீது அதிக அக்கறை மற்றும் மரியாதை கொண்டதால்தான் அவர்களுக்காக நகையை அடகு வைக்கும் படி கூறியுள்ளார் என்றால் சரியல்ல. 1ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாலி செயினாக எனக்கு நாலு பவுன் போட்டார்கள் என்றால் இல்லை. என்வீட்டில் தாலி செயினுக்கு இரண்டு பவுன் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் தாலிச் செயினுக்கு இரண்டு பவுன் நகை போட்டார்கள்.

8) அவ்வாறு போடப்பட்டதாக சொல்லப்படும் தாலி செயின் ஆனது திருமணத்தின்போது தான் எனக்கு போடப்பட்டது என்றால் சரிதான். திருமணத்தில் மணமகன் சார்பாக தான் தாலி செயின் போடுவார்கள் என்றால் சரிதான். நான் என் வீட்டில் இரண்டு பவுன் நகை போட்டதாக சொல்வது அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. 2 பவுனுக்கான தொகையை திருமணத்திற்கு முன்பாகவே எதிர்மனுதாரர் வீட்டில் என் வீட்டார் கொடுத்து விட்டனர் என் அப்பாவையும் அம்மாவையும் விசாரித்தால் அவர்கள் கொடுத்தார்கள் என்று தெரிந்து விடும் என்றால் சரிதான். ஆனால் எனக்கு அம்மா மட்டும் தான் இருக்கிறார்.

ஒம்/-மல்லிகா

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகளின் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்.செல்வி.பா.ஜெயபிரதா)
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
அரியலூர்.